# தேனீ வளர்ப்பில் ராணி தேனீ பற்றிய தகவல்




**முனைவர். வீ.சாதனா,**

**உதவி பேராசிரியர் (பூச்சியியல்துறை),**

**புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை- 622 303**

**மின்னஞ்சல்: sadhanaveeramani@gmail.com**


## ராணி தேனீவளரும் விதம்:

- கருவுற்ற முட்டையிலிருந்து மூன்று நாட்களில் புழுக்கள் பொரிந்து வெளிவருகின்றன. புழுவிற்க்கு தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு வேலைக்காரத் தேனீக்களால் தேனீப்பால் (*royal jelly*) வழங்கப்படுகின்றது.
- ராணித் தேனீ வெளிவந்தவுடன் பிற வளரும் ராணித் தேனீக்களைக் வேலைக்காரத் தேனீக்கள் கொடுக்கால் கொட்டிக் கொல்கின்றது.
- ராணித் தேனீ வெளிவந்த 5-10 நாட்களில் தேனீக்கூட்டிற்கு வெளியே வான் வெளியில் ஆண் தேனீயுடன் புணர்ச்சி (*nuptial flight*) நடைபெறுகிறது. புணர்ச்சியின் பொழுது விந்துப்பை வாழ்நாள் முழுவதும் முட்டையிடத் தேவையான அளவு விந்துக்களால் நிரப்பப்படுகின்றது. புணர்ந்த நான்கு நாட்களுக்குப் பின் ராணித் தேனீ முட்டையிடத் தொடங்கும்.
- ராணித் தேனீயின் வளர்ச்சிப் பருவங்கள், முட்டை- 3 நாட்கள், புழு- 5 நாட்கள், கூட்டுப்புழு 7-8 நாட்கள் என மொத்த வளர்ச்சிக் காலம் 15-16 நாட்கள் வரை உள்ளது. ஆயுட் காலம் 2-3 ஆண்டுகள், சிறப்பான பணிகாலம் 1.5 ஆண்டுகளாகும்.

## ராணி தேனீயின் பணிகள்:

- ராணித் தேனீயானது தேனீக் கூட்டத்தின் அன்னையாகும்.
- ஒரு முட்டையிடும் இயந்திரம் போல அயராது முட்டைகள் இட்டு பணித் தேனீக்களையும், ஆண் தேனீக்களையும் ஈன்று தருகிறது, ராணித் தேனீயால் முட்டையிலிருந்து வரும் புழுக்களுக்கு உணவு தரவோ அவற்றைப் பேணி வளர்க்கவோ இயலாது.
- ஒரு ராணித் தேனீ நாளொன்றுக்கு சராசரியாக 500 முதல் 2000 முட்டைகள் வரை இடும்.